3. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு, 2013 (அ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2013) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்), 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2013), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2013)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

**6-5-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 21 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சொத்து வரி வாரியச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவின்மீது கருத்து கூறுவதற்கு நீங்கள் முன்பே வாய்ப்புக் கேட்டிருக்க வேண்டும். இப்போது சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறிவிட்டது. நீங்கள் அப்போதே வாய்ப்புக் கேட்டு கையைத் தூக்கி இருந்தால் நான் அனுமதி கொடுத்திருப்பேன். சரி, பேசுங்கள், பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. அ. சவுந்தரராசன்: *அதாவது, இந்தச் சட்டம் நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடைய உரிமையைப் பறிக்கிறது என்று நாங்கள் கருதுவதால் இந்தச் சட்டத்தை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். வரி போடுகிற, சொத்து வரியைத் தீர்மானிக்கிற அவர்களுடைய அந்த உரிமையை இது பறிக்கிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கருதுவதால் இந்தச் சட்டத்தை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இது ஒரு சீரமைப்பு. நகராட்சியில் இருக்கின்ற சொத்துக்களுடைய வரிகள் பல்வேறு விதமான நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அதை*

எப்படியெல்லாம் திருவளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த வாரியத்தை அமைத்திருக்கிறது. இந்த வாரியத்தின் வாயிலாக அதைச் சீர்செய்வதற்காகத்தான் இந்த வாரியம் துவக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், மற்றும் ஊரக வளர்ச்சி சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-55

(ஆ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியத் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியத் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2013), மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

@**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியத் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 15-5-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.